**நகர்மன்றம்,**
**போடிநாயக்கனூர் ,நாள்.24.01.2023**

**2023ம் ஆண்டு ஜனவரி மாதம் 25.01.2023ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்**

முன்னிலை :- திருமதி.ச.ராஜராஜேஸ்வரி,
நகர்மன்ற தலைவர்.

❖ **<u>பொருள் எண்–1 :</u>**

போடிநாயக்கனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வரையான வார்டு பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 24608/2022/EA2 நாள்.21.10.2022 இல் குறிப்பிடப்பட்டுள்ள வழி காட்டுதலின் படி இவ்வலுவலக கடிதம் ந.க.எண்:3055/202/எச்1, நாள்.27.12.2022–ல் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு (Proposal) சமர்ப்பித்ததன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.35945/2022/EA2-SWM–1, நாள்.10.01.2023–ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் படி போடிநாயக்கனூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் நிறுவனம் / சேவை வழங்குபவர்கள் / ஒப்பந்ததாரர்கள் (Service Provider / Agency / Contractor) மூலம் ஒப்பந்த அடிப்படையில் மூன்று வருடங்களுக்கு உரிய நிபந்தனைகளை கடைபிடித்து தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1988 மற்றும் விதிகள் 2000 (Tamilnadu Tender Transparency Act, 1988 and Rules 2000)–யை கடைபிடித்து ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும், தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்வதற்கான செலவு தொகை , வரிகள் உட்பட கீழ்க்காணும் பட்டியலின் படி மொத்தம் செலவினம் ஆண்டு ஒன்றுக்கு தொகை ரூ. 469.09/– இலட்சத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கான அனுமதி விவரப்பட்டியல் பின்வருமாறு :–

| Name of the Municipality | Quantity of waste Generated (TPD) | Rate per Tonne (in Rs) | Estimated Base cost per day (Rs.in Lakh) | Estimated base cost per year (Rs.in lakh) | Applicable GST 18% and LWF 1% (Rs.in lakh) | Estimated total cost per year (Rs.in lakh) |
|---|---|---|---|---|---|---|
| Bodinayakanur | 26.36 | 4083.84 | 1.08 | 394.20 | 74.89 | 469.09 |

மேலும் அதற்குரிய சேவைக்கட்டணத்தொகை செலவினங்களுக்கும் மேற்படி கணக்கீடு பட்டியலின்படி தெரிவிக்கப்பட்டுள்ள ஓராண்டுக்கான செலவினம் தொகையினையும் , ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான அறிவிப்பு நாளிதழில் விளம்பரம் செய்தல் போன்ற பணிகளுக்கு உத்தேச செலவினம் தொகை ரூ50000/—னை (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u> : —**மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்: 3055 / 2022 / எச்1)**

**தீர்மான எண் :** 177 — அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) திருமதி.ச.ராஜராஜேஸ்வரி
நகர்மன்ற தலைவர்

// உண்மைநகல் //

ஆணையாளார்(கூ.பொ)
போடிநாயக்கனூர் நகராட்சி